# மனித உரிமைகள் மீட்பு

மாதமிருமுறை இதழ்

உரிமை - 7 மீட்பு - 23 மார்ச் 1 - 15 | 2023 விலை 20 / -




## பெரம்பலூர் மாவட்டம், அகரம்சீகூர் பஞ்சாயத்தில் 1 கோடியே 30 இலட்சத்தில் சமூகநலகாடுகளை முழுங்கிய தலைவர்!



## கலப்பு திருமணம் செய்தது குற்றமா?

## நியாயம் கேட்கும் மலர் கொடி!





## ஏமாறும் மக்கள் இருக்கும் போது ஏமாற்றத்தான் செய்வோம்!

## கிரீன் சிட்டி பங்குதாரர்கள் நக்கல்...

# கோராகுளம் சுற்று தடுப்பு சுவர் மக்களின் பயன்பாட்டிற்காக படித்தரை கட்டுவது சம்பந்தமாக கோரிக்கை!











*17.02.2023* அன்று கோராகுளத்தின் படிகட்டுகட்டுவதற்க்கு அரசு அதிகாரிகளை பார்க்க மாநில மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் மனித உரிமைகள் மீட்பு நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் மாநில துணைத்தலைவர் DR.S முஹம்மது அலி சர்வதேச செயல் தலைவர் DR.P. முருகேசன் மாநில தலைமை துணைச் செயலாளர் R. சாம் எட்வர்ட் மாவட்ட தலைவர் M. செய்யது மிர் காசிம் மாவட்ட செயலாளர் C. பிரபாத் சிங் மாவட்ட பொருளாளர் D. ஜஸ்டின் ராஜ் மாவட்ட துணை தலைவர் K. ராஜாமணி மாவட்டத் துணைச் செயலாளர் V. செல்வமணி மாவட்ட செய்தி தொடர்பாளர் H. ஹாஜா மைதீன் ஆளூர் முஸ்லிம் ஜமாத் முன்னாள் செயலாளர் S.M. புகாரி மாநகர காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. S. நவீன் குமார் துணைத் தலைவர் S. சைலஷ்குமார் மாவட்ட மகிலா காங்கிரஸ் தலைவி சோனி விதிலா மகேர் மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

**- கௌரவ இணை ஆசிரியர் R. ரத்தீஷ்**

# மனித உரிமைகள் மீட்பு

## (மாத இருமுறை இதழ்)

உரிமை-7 மீட்பு-12 மார்ச் 1-15 | 2023



**வெளியீட்டாளர்:** M. அப்துல்ரகுமான்.

**ஆசிரியர்:** நீலகிரி K. மதுசூதனன்.

**இணை ஆசிரியர்:** புதுவை K. ராஜாராம்குமார்.

**தொகுப்பு ஆசிரியர்:** , வேலூர் M. ராமச்சந்திரன்.

**சிறப்பு உதவி ஆசிரியர்:** தேனி AR. நாசர்கான்.

**சிறப்பு துணை ஆசிரியர்:** நாகர்கோயில் Dr. S முகமது அலி,

**சிறப்பு செய்தி ஆசிரியர்:** வாணியம்பாடி G. வெங்கடேசன்.

**பொறுப்பு ஆசிரியர்:** பெரம்பலூர் M. இளவரசன்.

**தலைமை செய்தி ஆசிரியர்:** பரமகுடி S. பதர்னிஷாபேகம்.

**கௌரவ ஆசிரியர்:** கிருஷ்ணகிரி Dr. குமரவேல்.

**தலைமை ஆசிரியர்கள்:** Dr. முகம்மது காசிம், Dr. K. கலைச்செல்வன்.

**முதன்மை ஆசிரியர்கள்:** C.J. சுதர்மன், R.M நந்தினி,
T. அரவிந்தன், Dr. P. முருகேசன், கேரளா P.K. பிரதிஷ்.

**நிர்வாக ஆசிரியர்கள்:**
Dr M. ஹரிகிருஷ்ணன், M. காதர் முகைதீன்.

**கௌரவ இணை ஆசிரியர்கள்:** R. அகிலேஷ்.
SGM. ரமேஷ், D.G. தினகரன், N. அன்பழகன்,
A. பிரபாகரன், S.A. சையதுமுகைதீன் ஆலிம்,
S. லோக சுந்தரம், A. விஜி, R. ரத்தீஷ், C.சத்ஷ்.

**கௌரவ செய்தி ஆசிரியர்கள்:**
M. ஞானசேகர், R. சந்திரபோஸ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:** S. ரமேஷ், R. சாம் எட்வர்ட்.

**செய்தி ஆசிரியர்கள்:**
M. ராமச்சந்திரன், புதுவை S செல்வமணி.

**கௌரவ இணை ஆசிரியர்:** A.R. பத்மநாதன், RNS. வெங்கடேஷ்வரா

**முதன்மை துணை ஆசிரியர்கள்:** M. தனராஜ், M. லோகேஷ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:**
D. கென்னடி, L.S. மனோகரன், S. தினேஷ்ராஜ்,
M. இளங்கோவன்.

**தலைமை இணை ஆசிரியர்கள்:**
G. திருச்செந்தில்வேல், T. செந்தில்குமார்,
ST ஜோசப், K. சதிஷ்சன்.

**தலைமை கௌரவ ஆசிரியர்கள்:**
M. கார்த்திக், A. ஷபீக் ரகுமான்.

**தொகுப்பு இணை ஆசிரியர்கள்:**
M. விஜயகுமார், S.B. ரவிக்குமார்.

**தொகுப்பு துணை ஆசிரியர்கள்:**
C. பெருமாள், J. கோவிந்தராஜ், C. அய்யாவு.

**துணை ஆசிரியர்கள்:**
D.சுரேஷ்குமார், G.சுரேஷ்.

**கௌரவ துணை ஆசிரியர்கள்:**
P. சதீஷ், G. அருள்செல்வன், D. கோபிநாத்,
P. உதயகுமார், A.T. அஷ்ரப், S. ரவிக்குமார், M. ஜெய்பிரசாத்

**உதவி ஆசிரியர் குழு:**
K. நமச்சிவாயம், S. சரவணன், M.S. ஆரோக்கியசாமி,
M. விஜயேந்திரன். K. தம்புசாமி, முசா(எ)சாகுல் ஹமீது, Dr. ஸ்டேன்லி மோசஸ், Dr. L. ரமேஷ், A.S. அருண்குமார், A. முஜிபுர் ரகுமான், M. மாலா, M. ஆனந்தராஜ், AMS. ஹம்சத்அலி, R. சுப்பு, D. ராஜீவ்காந்தி, S. முரளிதரன், T. சுதாகர், S. கலாநிதி, G. கலையரசன், M. நாகராஜ்.

**நிருபர்கள்:**
M. தயாநிதி, A. வீரசுந்தரம், S. சுல்தான்அலாவுதீன்,
M.சுரேஷ்குமார், M. செய்யது சகாபுதீன்,
S. சீனிவாசன், S. கிருஷ்ணன், P. வேல்முருகன்,
A. பார்த்திபன், S. சுரேஷ், S. சுப்ரமணி, லாசரஸ் கோவல்,
D. வில்வநாதன், G. ஜாபர் அலி, Dr.A. அருள்சாமி,
V. முத்துகுமரேசன், S. சுந்தரமூர்த்தி, C. பிரபாசிங்,
M.J. சீனிவாசன், B. செல்வமணி, Dr. முஸ்தபா,
S. லோகநாதன், A. முகமது தௌபிக், M. ஈஸ்வரி,
V. ராஜாமுகமது, I. இப்ராஹிம், S.S. சஹாபுதீன்,
A. முகமது இதிரீஸ், R. ஜெயாகிருஷ்ணன்,
K. ரஜமோனி, A. விஜயசிங்கம், G. குமரேசன்,
M. அஹமத்முஸ்தபா ஆலிம், M. தமிழ்செல்வன்,
Y. முபாரக், ரியாஸ் அகமது, R. முகமது ஷெரீப்,
முஜிபூர்ரகுமான், S. சசிகுமார், R. ரவி, A. அமிர்தவேல்,
Y. மைதின் ஷசா, V. செல்வராஜ், S. சபாபதி,
Dr. டார்வின் ஜான், ஜெயசுனிதா, R. சுதாகர்,
A. செல்வராஜ், C. அய்யாவு, K. சின்னராஜா, N. சுரேஷ்,
Y. முபாரக் அலி, S. ரியால் அகமது, M. கோவிந்தராசு,
முரளி (எ) பிரேம்குமார், S. பாலமுருகன், S. தென்னரசு,
Dr. ஜான் டைட்டஸ் இம்மானுவேல்,
R. பிரஸ்டன்ட், R. டேனியல், சத்திய நாராயணன்,
இர்பான், W. பீட்டர், கார்த்திகேயன், சரவணன், ஜான் மார்க், கோபாலகிருஷ்ணன், B. புஷ்பலதா, C. பெருமாள்,
K.A. செல்வராஜ், K. குணசேகரன், M. கலந்தர் முகைதின்,
S. சுந்தரமூர்த்தி, M. சுரேஷ், P. சிவகாமி, உபகாரம்,
ஆறுமுகம், A. பாலசுப்பரமணியன், தாமரைகனி,
K. மணிகண்டன், M. பாலமுருகன், R. நாகராஜன்,
வேலுச்சாமி, K.S.சசிகுமார், L. ராஜகணபதி, A. ஜாபீர்,
M.மனோஜ், S. வெங்கடேஷ்குமார், G.ஜெயபிரகாஷ், S.ரபி,
N.ஜெய்கணேஷ், M.ராஜா, M.தயாளன், K. விஜயகுமார்,
P. கிரேசி எலிசபத்மேரி.

**சட்ட ஆலோசகர்கள்:**
C. பாலாஜி BABL, M. ஞானசேகரன் BABL.

**புகைப்பட நிருபர்கள்:**
AMS. சல்மான் அஹமது, A. குர்சித் ஆலம் கான்,
R.S. ராஜேந்திரன், R. ரவி, V. வித்யாவீரப்பன்,
Dr.R. செல்வராணி. K. ஷக்கீனா சொர்ணலதா, மதிவிழி.



**இந்த இதழ் குறித்த அனைத்து தொடர்புகளுக்கும் முகவரி:**
ஆசிரியர்,
**மனித உரிமைகள் மீட்பு (மாத இருமுறை இதழ்)**
எண்:2/115D1, ஆன்டாஞ்சிரா, கொன்னச்சால் Po,
எருமாடு, பந்தலூர் தாலூக்கா, நீலகிரி மாவட்டம்,
தமிழ்நாடு-643239.
Mail: manithurimaigalmeetpu@gmail.com


"மனித உரிமைகள் மீட்பு" இப்பொழுது ஆன்லைன் செய்திகளாய் உலகமெங்கும்.
https://youtube.com/@manithaurimaigalmeetpu5936 என்ற Youtube மூலமாக காணலாம் மற்றும் சமூக வலைத்தளத்தில் பகிரலாம்.


எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்தின் வரம்புக்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு மனித உரிமைகள் மீட்பு இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் சிறப்பு கட்டுரையாளர்கள் இன் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே.


## முக்கிய அறிவிப்பு

**மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கை சங்கங்கள் இல்லை. மனித உரிமைகள் மீட்பு என்பது இந்திய பத்திரிக்கை துறையில் RNI பதிவு பெற்ற பத்திரிகையாகும். சில நபர்கள் மனித உரிமைகள் என்ற பெயரில் அமைப்புகள் மற்றும் சங்கங்கள் போன்று செயல்பட்டால் பத்திரிக்கை நிர்வாகம் பொறுப்பேற்காது.**

**இப்படிக்கு**
**-ஆசிரியர்**

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் வேப்பூர் ஒன்றியம் அகரம்சீகூர் பஞ்சாயத்து ஊராட்சி மன்றதலைவர் முத்தமிழ்செல்வன் பலகோடி ஊழல் செய்துள்ளார். ஏழைஎளியமக்களுக்கு வீடுகட்டும் பயனாளிக்கு தலா 20000 ரூபாய் கையூட்டு கொடுத்தால் தான் வீடுகட்ட அனுமதி ஜல் ஜீவன் திட்டத்தில் அகரம் சீகூர் பகுதியில்குடிநீர் இணைப்பு வழங்கியதில் ஒபந்ததாரர் கருப்பையா மற்றும் முன்னால் ஊராட்சி செயலர் சுமதிசெல்வம் உடன் கூட்டு சேர்ந்து உண்மையான ஆசீர்வாத் பைப்புகள் 20 அடி 550 ரூபாய் ஆனால் இவர்கள் 200 ரூபாய்க்கு தறமற்ற பைப்புகள் போட்டு Bdo செல்வக்குமார் அவர்களுக்கு அதிகஅளவில் லஞ்சம் கொடுத்து சுமார் 37 இலட்சம் ஊழல் செய்துள்ளனர்.



# பெரம்பலூர் மாவட்டம், அகரம்சீகூர் பஞ்சாயத்தில் 1 கோடியே 30 இலட்சத்தில் சமூகநலகாடுகளை முழுங்கிய தலைவர்!



வயலூர் கூட்டுறவு சங்ககட்டிட பணியில் கருப்பையா மற்றும் முன்னால் ஊராட்சி செயலர் சுமதி செல்வமுடன் கூட்டு சேர்ந்து பல இலட்சம் ஊழல் செய்துள்ளனர். அகரம் சீகூர் மேற்க்கு பகுதியில் உள்ள பள்ளிகூடத்தில் 300அடி ஆழம் போர்க்கு பதிலாக 30 அடி ஆழம் மட்டுமே போட்டுளனர் இதனால் பள்ளி குழைந்தைகளுக்கு சரியான முறையில் தண்ணீர் கிடைக்கவில்லை இதனால் பள்ளிகழிவறை பயன் படுத்த முடியாமல் பள்ளி மாணவிகள் அவதிக்கு உள்ளானார்கள். அகரம் சீகூர் மேற்க்கில் உள்ள ஏரிக்கரையில் இதே போல் 30 அடி ஆழத்தில் கடமைக்கு போர் போட்டு பல இலட்சம் ஊழல் செய்துள்ளனர்.



அரசுக்கும் மாவட்ட ஆட்சியருக்கும் தெரியாமல் அகரம்சீகூர் பார்டர் பகுதியில் இலஞ்சம் பெற்றுக்கொண்டு மாட்டு சந்தைக்கு அனுமதி வழங்கி பல ஆண்டுகளாக மோசடி செய்து அரசையும் மக்களையும் ஏமாற்றியுள்ளார். அகரம்சீகூர் பஞ்சாயத்து உட்பட்ட பகுதியில் புதியதாக வீடுகட்ட அனுமதிவழங்க சதுரடி க்கு அதிகமான பணம் வாங்கிகொண்டு போலி பில் மோசடி செய்து முன்னால் ஊராட்சி செயலர் சுமதி செல்வமுடன் கூட்டு சேர்ந்து மோசடி செய்துள்ளனர். அகரம்சீகூர் பஞ்சாயத்தில் புதியதாக மனைபிரிவுகள் (பிளாட்) அமைக்க விதிமுறைகள் பின்பற்றாமல் பல இலட்சம் பணம் வாங்கிகொண்டு மோசடி செய்துள்ளார்.

அகரம்சீகூர் பஞ்சாயத்தில் 1 கோடியே 30 இலட்சத்தில் வளர்த்து பாதுகாக்கபட்ட சமூகநலகாடுகளை காணவில்லை. அகரம்சீகூர் பஞ்சாயத்தில் வயலூர் ,கருப்பட்டாங்குறிச்சி மற்றும் அகரம் சீகூர். பார்டர் பகுதியில் எந்தவிதமான அடிபடைவசதிகள் ச.முத்தமிழ்செல்வன் தலைவர் பொறுப்பு வகித்தபிறகு மக்கள் நலன்க்காக எந்தவிதமான நலதிட்டங்களும் கொண்டுவரவில்லை அவர் நலன் சார்ந்த திட்டங்கள். எப்படி மக்கள் பணத்தை கொள்ளை அடிப்பது. எந்த திட்டத்தில் எவ்வளவு பணம் கிடைக்கும்.

யார் எவ்வளவு கமிசன் கொடுப்பார்கள் என்று சிந்திபதிலே அவர் இரண்டாண்டு காலம் பணமழையில் நனைந்து கொடுயுள்ளார்.மக்கள் நலன்சார்ந்து அவர் செயல்படவேயில்லை குறிப்பாக இவர் MGR மன்ற மாவட்ட பதவில் உள்ளதால் இவர் ஆளும்கட்சி கொண்டுவரும் நலதிட்டங்களை. திமுக அரசு எந்த திட்டமும் கொண்டுவரவில்லை என்றும் இந்த ஆட்சியே சரியில்லை பண்டே பஞ்சாயத்து க்கு வரவில்லை நான் என்ன செய்வேன். என்று போலியான தகவலை மக்கள் மத்தியில் பொய் பிரச்சாரம் செய்து ஆளும் கட்சிக்கு அவபெயர் உண்டாக்கி மக்கள் மத்தியில் கலகம் செய்து வருகிறார்.




அகரம் சீகூர் பஞ்சாயத்து ஊழல் சங்க தலைவர் ச.முத்தமிழ்செல்வன் அவரும் முன்னால் ஊராட்சி செயலர் சுமதி செல்வம் அவர்களும் கைகோர்த்து கொண்டு பல வீடுகள் வாங்கியுள்ளனர் குறிப்பாக பெரம்பலூர்ரில் ஆடம்பரவீடு அகரம்சீகூர் பார்டரில் வீட்டோட இடம். பல இலட்த்தில் வீட்டுமனைகள் .விழுப்புரம் To திண்டிவனம் சாலையில் புதியதாக பலகோடியில் மனைபிரிவுகள். கருப்படாங்குறிச்சியில் மனைபிரிவுகள் கேட்டால் சோழோஓட்டல் ஓனர் மருமகன் என்றும் ரியல்எஸ்டேட் ஜாம்பவான் என்றும் போலியான வேசத்தில் ஊராட்சி செயலர் கணவர் செல்வம் மக்களை அரசாங்த்தையும் மடையராக்கி பல கோடி ஊழல் செய்து திட்டக்குடி பகுதியில் மூண்று மாடிவீடுகட்டி வசிக்கும் போலி பில் போட்டு பல கோடி ஆட்டையை போட்டஊராட்சி முன்னால் செயலர்.

மாவட்ட நிர்வாகம் பதிவிநீக்கம் (25/1/2023) செய்தும் ஊழல் தலைவரின் நண்பன் செல்வம் ஊராட்சி செயலர் நேற்றுவரை பஞ்சாயத்து விசயத்தில்

தலையிட்டும் நாட்டாமை செய்தும் 100நாள் வேலையாட்களை மிரட்டியும் பஞ்சாயத்தில் வேலை செய்யும் துப்புறவு பணியாளர்களை மிரட்டியும் அதிகாரம் செய்து வருகிறார் அகரம் சீகூர் பஞ்சாயத்தில் நடக்கும் ஊழங்களை பற்றி பலமுறைகள் வட்டடார வளர்ச்சி அலுவலகத்தில் BDO செல்வக்குமார் மற்றும் சின்னபையன் இடமும் புகார் அளித்தும் பஞ் சாயத்து தலைவரிடம் இலஞ்சம் வாங்கி கொண்டு கையெழுத்து போட்டு இந்த மெகா ஊழக்கு துணைபோன செல்வக்குமார் சின்னபையன் மீதுபலமுறை புகார் கொடுத்தும் மாவட்ட திட்ட இயக்குனர் லலிதா அவர்கள் இந்த ஊழல் பெருசாளிகளுக்கு துணையாக இவர்மீது எந்தவித நடவடிக்கை எடுக்கவில்லை.



மேலும் செல்வக்குமார் பெரம்பலூர் மாவட்டம் பெண்ணக்கோணம் ஊராட்சி பகுதியில் இலப்பைக்குடிக்காடு பகுதியில் புதுமைமிகு நகர் மனைபிரிவுகள் அனுமதிவழங்க சுமார் 14 இலட்சம் பணம் கைமாறியுள்ளது. இந்த பணம் AD பஞ்சாயத்து வரை அனுமதி வழங்க பணம் கைமாறியுள்ளது.

ஏழை எளிய மக்கள் பயன் பெறும் பள்ளிக்கு பராமரிக்க 7:5 இலட்சம் தலா ஒரு பள்ளிக்கு வழங்கியதொகை பெரம்பலூர் மாவட்டம்சுமார் 121 பஞ்சாயத்து முழுவதும் பலகோடி ஊழல் இவை அனைத்தும் மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிந்து ம் நடவடிக்கை யில்லை குறிப்பாக வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கீழப்பெரம்பலூர் மற்றும் வேள்விமங்கலம் பள்ளிகளில் பாராமரிப்பு பணிகள் நடைப்பெறாமல் BDO சின்னபையன் கையெப்பம் இட்டு மாட்டிக்கொண்டு அவரே அவர் பணத்தை கொண்டு பெயிண்ட் அடித்த கதையும் அறங்கேறியது இவை அனைத்தையும் வீடியோ ஆதாரத்துடன் சமூக ஆர்வளர்கள் மாவட்ட திட்ட இயக்குனர் லலிதாவிடம் வழங்கியும் BDO சின்னபையன் மீது நடவடிக்கை எடுக்கபடவில்லை.

வேப்பூர் BDO சின்னபையன் கடந்த டிசம்பர் மாதம் M book ஊழல் மூலம் பல ஆயிரம் ரூபாய் கையாடல் செய்துள்ளார். சித்தெளி பேரளி கிராமத்தில் வெட்டாத கிணறுக்கு போலியான பில் போட்டு பல இலட்சம் ஊழல். வேப்பூர் அலுவலகத்தில் மின் பல்புகள் வாங்கியதில் பல ஆயிரம் ஊழல். BDO சின்னபையன் காடூரில் இரண்டு வருடம் முன்பு அமைக்கப்பட்ட தண்ணீர் தொட்டிக்கு மீண்டும் புதியபில் போட்டு ரூ.85000 ஊழல். 100 மீட்டர் சாலைக்கு 70 மீட்டர் போட்டு மீதி 30 மீட்டர் போடாமலே இலஞ்சம் வாங்கி கொண்டு கையெப்பம் ஈட்டு ஊழல் இதே போல் இந்த வேப்பூர் ஒன்றியம் முழுவதும் BDO சின்னபையன் கையெழுத்து போட்ட அனைத்து சாலைகள் பாலம். தண்ணீர் தொட்டி. போர் போட்டுதல் என அனைத்திலும் ஊழல் 400 அடி ஆழம் உள்ள போருக்கு வெரும் 40 அடி போட்டு பல இலட்சம் கமிஷன்.

பரவாய் சமத்துவபுரம் வீடு பராமரிப்பு செய்ய 100 வீடுகளுக்கு தலா 50000 ரூபாய் வழங்க 3000ரூபாய் இலஞ்சம் பெற்று பல இலட்சம் ஊழல். BDO சின்னபையன் வேப்பூர் ஊராட்சி மன்ற பள்ளிகளில் மேசைகள் நாற்காலி வாங்கியதில் அரியலூர் SK பர்னிசர் மூலம் பல இலட்சம் ஊழல். திருமாந்துறை, ஆடுதுறை, பெண்ணக்கோணம், அத்தியூர், ஒகளூர் ஆகியபகுதிகளில் ஆரோவாட்டர் அமைக்க பல இலட்சம் ஊழல். இப்படியே அடிக்கி கொண்டே போகலாம் BDO சின்னபையன் ஊழல். இவை அனைத்தும் மாவட்ட நிர்வாகத்திடமும் பல முறை மாவட்டஆட்சியரிடமும் மனு கொடுத்தும் கண்டுகொள்ளாமல் ஊழலுக்கு துணைபோகும் அவலநிலை பெரம்பலூர் மாவட்டதில் தொடந்து நடை பெருகிறது

பெரம்பலூர் மாவட்டத்தில் மகளிர் புத்தாகதிட்டம் மகளிர் புதுவாழ்வு திட்டம் பல கோடி ஊழல் மகளிர் சமூக கழிப்பறை அகரம்சீகூர் பஞ்சாயத்து கட்டாமல் தலைவர் முத்தமிழ்செல்வன் இடம் கமிஷன் கொடுத்து

சமூக கழிப்பறை அமைக்காமல் அமைதாக

தீர்மானம் போட்டு பல இலட்சம் ஊழல். திட்ட இயக்குனர் ஊழல் பெருசாலி கருப்புசாமி மற்றும் Apo மகேஸ்வரன் மாவட்ட சூப்பிரண்டு வாசுகி பெரம்பலூர் மாவட்ட 121 பஞ்சாயத்து தலைவர்கள் BDO செல்வக்குமார் Ad பஞ்சாயத்து அலுவலர்கள் மாவட்டநிர்வாகம் அனைவரும் சேர்ந்து பல கோடிகள் ஊழல் செய்துள்னர் உதாரணமாக குறுந்தொழில் செய்ய 113 இலட்சம் வங்கி கட ன் பெற இலக்கீடு நிர்ணயம் செய்து பல இலட்சம் திட்ட இயக்குனர் கருப்புசாமி மற்றும் ஊழல் நிபுணர்கள் கூட்டு சேர்ந்து ஆடையபோட்டுள்ளனர் பெரம்பலூர் மாவட்டதில் உள்ள தனிநபர்களுக்கு கடன் வழங்காமலே அல்வா கொடுத்துள்ளனர்.

சுய தொழில் செய்ய 114.95 கோடி வங்கிகடன் இணைப்பு பெற்றுத்தர இலக்கு நிர்ணயம் செய்யபட்டுளது அதில் வங்கிகடன் வழங்காமல் பல கோடிகள் ஊழல். EST&P திட்டத்தின் மூலமாக நர்புற இளைஞர்களுக்கு இலவசமாக தொழில் திறன் பயிற்சி வழங்காமல் 2020-2021, 2021-2022 அதிக அளவிற்கு பல கோடிகள் ஊழல். சுய உதவிக் குழு கிராம ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கூட்டங்களில் FNHW நிகழ்ச்சி அறிமுகப்படுத்வில்லை. போஷன் அபியான் தொடர்பான நடவடிக்கை கிராம அளவில் செயல்படுத்தபடவில்லைமுறையான உணவு சேமிப்பு சமைத்தல் மற்றும் உண்ணுதல் போன்ற பழக்கவழக்கங்கள் பற்றி விழிப்புணர்வு கொடுக்காமல் பல இலட்சம் ஊழல்.

மக்களை தேடி மருவத்துவ பணியாளர்களை கண்காணிப்பது முதியோர் குழு. நலிவுற்றோர் குழு.மாற்றுத்திறனாளி குழு. திருநங்கையார் குழுக்களை பெரம்பலூர் மாவட்டத்தில் அமைக்காமல் அவர்களை பாதுகாக்காமல் பல கோடி திட்ட இயக்குனர் கருப்புசாமி வாசுகி மற்றும் மகேஷ்வரன் ஊழல் பெருசாலிகள் ஊழல் செய்துள்ளனர். CRP& CRPs-LH. தொழில் எண்ணங்களை தொழிலாக அமைப்பதற்கு தேவையான கருத்துக்களை அளிக்கவில்லை.

தொழில் ஆரம்பிப்பதற்க்கு ஏற்கனவே உள்ள தொழிலை வளர்ச்சியடைய செய்வதற்கும் உடனிந்து வழிநடத்துதல் சந்தைப்படுத்தல் மற்றும் வியாபார தொடர்புகளை ஏற்படுத்தாமல் பெரம்பலூர் மாவட்ட மகளிர் மீதும். முதியோர்.நலிவுற்றோர். மாற்றுத்திறனாளி. திருநங்கை. இளைஞர்களின் வாழ்கைவாழ்வதற்கு வழிவகை செய்யாமல். மாவட்ட திட்ட இயக்குனர் கருப்புசாமி Apo மகேஷ்வரன்.

மாவட்ட சூப்பிரண்டு வாசுகி மேலும் பலர் கூட்டுசேர்ந்து பெரம்பலூர் மாவட்டத்தில் பலகோடிகள் மகளிர் திட்டத்தின் மூலமாக



மக்களின் வரிபணம் களவாடபட்டன. இதனை அறிந்த மக்கள் ஊழல் தடுப்புஇயக்க மாநில இயக்குனர் மா.இளவரசன். மாவட்ட திட்ட இயக்குனர் கருப்புசாமியிடம் கேட்ட போது உன்னால் முடிந்ததை பார் நான் யாருக்கும் பயபடமாட்டேன் பெரம்பலூர் மாவட்டமே என் கையில் தான் என்று தெறிவித்தார் உடனே இளவரசன் மேலாண்மை இயக்குனர் சென்னை அன்னை தெரேசா மகளிர் வளாகம் இடம் புகார் அளித்தும் பலன் இல்லை என்னமோ போங்க கோடிகளில் கொள்ளை அடிக்கும் பெரம்பலூர் மாவட்ட திட்ட இயக்குனர் அப்புறம் என்ன ஓட்டு போட்ட மக்களுக்கு அல்வா தான்.

-சிறப்பு உதவி ஆசிரியர் AR. நாசர்கான்



# ஏமாறும் மக்கள் இறுக்கும் போது ஏமாற்றத்தான் செய்வோம்!



ஏமாற்றியவர்கள்

## கிரீன் சிட்டி பங்குதாரர்கள் நக்கல்...

**ராமநாதபுரம் மாவட்டம் பரமகுடியில் ரூபி ஏஜென்சி நடத்தி பணம் பறிக்கும் கும்பலிடம் பணம் கொடுத்து ஏமாந்தவர்களின் சோக கதை அதில் அதிகம் பாதிக்கப்பட்ட அதே பகுதியை சேர்ந்த திருமதி சிவகாமி அவர்களிடம் நம் ஆசிரியர் குழு தகவல் சேகரித்தபோது பல உண்மைகள் வெளிவர தொடங்கின.**

*இதுகுறித்து அவர் கூறுகையில்*

*நான் இதே ஊரில் (பரமகுடி) வசித்து வருகிறேன்*

*2011 ஆம் ஆண்டு பரமகுடி காமராஜர் நகர் சௌராஷ்ட்ரா மேல்நிலைப் பள்ளி எதிரில் ரூபி ஏஜன்சீஸ் மற்றும் கிரீன் சிட்டிலேண்ட் புரோமோட்டர்ஸ் என்ற நிருவனம் நடத்தி வந்தார்கள்.*

*இந்நிலையில் கடந்த 2011ஆம் ஆண்டு பரமகுடியை சேர்ந்த கயல்விழி என்பவர் என் வீட்டிற்க்கு வந்து பரமகுடி அருகில் சீட்டு பணம் கட்டி தங்க நாணயம் அல்லது மொத்த பணம் அல்லது இடம் ஏதாவது ஒன்று குறைந்த விலையில் தருவதாக சொன்ன பேச்சை நம்பி நாங்கள் இருவரும்*





பாதிக்கப்பட்ட திருமதி.சிவகாமி

மேற்கண்ட முகவரியிலுள்ள கிரீன் சிட்டி அலுவலகத்திற்கு சென்றோம் அப்போது அங்கு அலுவலகத்தில் இருந்த 1. ஜான்பால்,2. யாஸ்மின்,3. ஜான் செல்வம்,4.அனிதா,5. பொருள் பொன்னையா,6. பாத்திமாராணி ஆகிய 6 பேரும் என்னிடம் அவர்களது பிஸினஸ்லை பற்றி விளக்கி சொன்னார்கள்.

என்னை அவர்களது வாகனத்தில் அழைத்து சென்று தங்க நாணயத்தை காண்பித்தார்கள் பிறகு வீட்டிற்க்கு வந்த பிறகு மேற்கண்ட நபர்கள் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களது பிஸினஸில் சேருமாறு வற்புறுத்தினார்கள் அதன் பிறகு மேற்கண்ட அனைவரது பேச்சை நம்பி ஐந்து நபர்களை முதல் தவணையாக சேர்த்துவிட்டேன் மாதம் 500 ரூபாய் வீதம் 60 மாதங்கள் மொத்தம் 30,000 ரூபாய் கட்டினால் இரண்டு பவுன் தங்க நாணயம் அல்லது இடம் தருவதாக உறுதியளித்தனர்.

அதன் பிறகு நாங்கள் சுமார் 300 நபர்கள் சேர்ந்து மேற்படி அவர்களது பேச்சை கேட்டு மாதமாதம் பணத்தை 2016 ஆண்டு வரையிலும் செலுத்தி வந்தோம்.

அதன்பிறகு மேற்கண்ட அவர்களிடம் தங்க நாணயத்தை கேட்டதற்க்கு காலம் தாழ்த்தி அலட்சியம் செய்தார்கள் பிறகு அனைவரும் ஒன்றுகூடி தங்க நாணயத்தை அல்லது கட்டிய பணத்தை கேட்டு வற்புறுத்தியதால் மேற்படி அனைவரும் எங்களை ரவுடிகளை வைத்து மிரட்டி கொலை மிரட்டல் விடுத்து முக்கியமான ஆவணங்களில் கையொப்பம் வாங்கினார்கள் மேலும் இது சம்பந்தமாக அலுவலகத்திற்கு வந்தால் கூலிப்படையை வைத்து கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார்கள் பிறகு இது சம்பந்தமாக

அந்த ஆறு பேர் மற்றும் ஏழாவதாக கயல்விழி, எட்டாவதாக வி.தனசேகரன் பத்திர எழுத்தர் பரமகுடி ஆகியோர் மீது அரசு அதிகாரிகளிடமும் காவல்துறையிடமும் மாவட்ட ஆட்சியரிடமும் புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தற்போது அவர்களால் என் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை நிலவி வருவதால் ஏமாற்றியவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்து பணத்தை மீட்டுதரும்படி சம்பந்தபட்ட அதிகாரிகளை கேட்டுக்கொள்வதாக தெரிவித்தார்.

மேலும் விசாரித்ததில் இதுபோல பலரும் பாதிப்படைந்துள்ளது தெரியவந்துள்ளது மேலும் இது போன்ற மாஃபியாக்களை அடையாளம் கண்டுதக்க தண்டனை வழங்கி சாமானியனுக்கும் வாழ பாதுகாப்பை உறுதிபடுத்த வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கருதுகின்றனர்

- பொறுப்பு ஆசிரியர் M. இளவரசன்



# பெரம்பலூரில் ஒரு நூதன முறையில மோசடி!


# ஏழைகளின் கண்ணீரை குடிக்கும்...

**பெரம்பலூர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுதூர் ராம்பிள்ளை காலணி இளம்பலூர் ரோட்டில் வசித்து வருபவர் சதாம் ஹுசைன் இவர் தூபாயில் தொழில் செய்வதாக கூறி அடிக்கடி போய் வருகிறார்.**

இவர் இந்தியாவில் தொழில் செய்ய போவதாக சொல்லிக்கொண்டு அயல்நாட்டில் வேலை செய்பவர்களின் குடும்பங்களுக்கு சென்று ஒரு குறிப்பிட்ட நபர்களிடம் சென்று அயல்நாட்டில் வேலை வாங்கி தருவதாகவும் அங்கு செய்யும்தொழிலில் முதலீடு செய்தால் நிறைய லாபம் வரும் என ஆசை வார்த்தைகள் கூறி தொழிலுக்கான முதலீடு என்று சொல்லி 25 லட்சம் ரூபாய் வரை வசூல் செய்துள்ளார்.

இதை நம்பி ஏழை குடும்பத்தார்கள் சதாம் ஹுசைன் வீட்டிற்க்கு சென்று மேற்குறிப்பிட்ட தொகையினை கொடுத்திருக்கிறார்கள்.

பிறகு மாதமாதம் வருமானம் வராத காரணத்தினால் பணத்தை கொடுத்தவர்கள் வருமான பணத்தையோ, முதலீட்டு பணத்தையோ திரும்ப கேட்டபோது அலட்சியமாக பதில் சொல்லியிருக்கிறார்.



சதாம் ஹுசைன்

பலே கில்லாடியான அவர் பலரையும் ஆசை வார்த்தைகள் சொல்லி ஏமற்றியிருப்பது ஒன்றன்பின் ஒன்றாக வெளிவந்த வண்ணம் உள்ளது.

- தலைமை ஆசிரியர் Dr. முகம்மது காசிம்

# பணி நிரந்தரம் செய்ய கேட்டு மாற்றுத்திறனாளிகள் காத்திருப்பு போராட்டம்...





100 நாட்களில் பணி நிரந்தரம் என்று கூறி வாக்குகளை பெற்ற திமுக அரசே!! 600 நாட்கள் கடந்து விட்டதே இன்னும எத்தனை நாள் தேவை எங்களை பணி நிரந்தரம் செய்வதற்கு??

முதன்மை ஆசிரியர்கள்: R.M நந்தினி



# கலப்பு திருமணம் செய்தது குற்றமா?

## நியாயம் கேட்கும் மலர் கொடி!

**தஞ்சாவூர் மாவட்ட பகுஜன் சமாஜ் கட்சியினுடைய மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.பார்த்திபராஜன் அவருக்கு நடந்த பாதிப்பை பகிர்ந்து கொள்கிறார்.**

நான் தஞ்சாவூரில் வசித்து வருகிறேன்.

நான் இந்து ஆதிதிராவிடர் பறையன் இனத்தை சேர்ந்தவர்.

நான் திருமணம் செய்துள்ளவர் மாற்று சமூகத்தை சேர்ந்தவர் ஆவார். எனக்கும் எனது மனைவி வடுவம்பாள் (எ) மலர்கொடி த/பெ காலம் சென்ற திரு. M. மருதையா பிள்ளை.

'காலம் சென்ற M. தனலட்சுமி என்கின்ற தம்பதிகளின் மகளை 1977 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டேன்.

எனக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர் நான் எனது மனைவியை திருமணம் செய்துகொண்ட பின்பு சுமார் மூன்று வருடங்களுக்கு பின் எனது மாமனார் மற்றும் எனது மாமியார் எனது இல்லத்திலேயே இறக்கும்வரை என்னுடன் வசித்து வந்தார் .



ஏமாற்றியவர் ராஜா

எனது மாமனாருக்கு இன்னும் இருண்டு மகள்கள் உள்ளனர் இதில் முதல் மகள் சுப்புலட்சுமி என்பவர் கருணாநிதி என்பவரை திருமணம் செய்து எருக்கம்பள்ளம், மாரியம்மன் கோவில், தஞ்சாவூர் தாலுக்கா என்ற முகவரியில் அவரது மகன் என்கிற ராஜா என்கிற மணல் ராஜா என்பவரிடம் வசித்து வருகிறார்.

எனது மாமனாரின் மற்றொரு மகள் வசந்தகுமாரி ஜெயகுமார் குருவாடி என்ற கிராமத்தை சேர்ந்தவரை திருமணம் செய்து மேற்க்கண்ட ஜெயகுமார் வசந்தகுமாரி ஆகியோருக்கு செந்தில்குமார் என்ற மகன் உள்ள நிலையில் மேற்க்கண்ட இருவரும் தற்போது இறந்துவிட்டனர்.

எனது மாமனார் திரு.வி.மருதையா பிள்ளைக்கு எருக்கம்பள்ளம் ஆலங்குடி, கரம்பை ஆகிய இடங்களில் சொந்த நிலம் தோப்பு, குத்தகை நிலம், பூர்வீக நிலம், இவைகள் சுமார் இருபது ஏக்கர் உள்ளது. மேற்கண்ட சொத்துக்களை சுப்புலட்சுமி அவரது கணவர் கருணநிதி இவர்களது மகன் ராஜா (எ) மணல்ராஜா என்பவர்கள் மட்டுமே வைத்துக்கொண்டு மேற்க்கண்ட நிலத்திலிருந்து சுமார் ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள மணலை சட்டவிரோதமாக வெட்டி எடுத்து விற்பனை செய்துள்ளனர். இதனை அறிந்த என்னுடைய மனைவி என்னிடம் சொல்லிய நிலையில் நான் எனது மனைவி ஊரான எருக்கம்பள்ளம் சென்றோம்.



பாதிக்கப்பட்ட
திரு.பார்த்திபராஜன்



பாதிக்கப்பட்ட
திருமதி. மலர்கொடி

7:9:2022 அன்று நான் ராஜா என்கிற மணல் ராஜா மற்றும் சுப்புலட்சுமி கருணாநிதியை சந்தித்து நான் ஏற்க்கனவே மாவட்ட ஆட்சியரிடம் தந்த புகாரின்பேரில் கனிம மற்றும் சுரங்கதுறை அதிகாரிகள் மேற்க்கண்ட இடங்களில் மணல்வெட்டியது சம்பந்தமாக 01:09:2022 அன்று விசாரித்த நிலையில் அது சம்பந்தமாக நான் சந்தித்து அன்றைய தேதியில் மேற்க்கண்டவர்களை கேட்டபோது ராஜா, சுப்புலட்சுமி, கருணநிதி ஆகியோர் கூட்டாக ஒன்று சேர்ந்து என்னை தாக்க முற்பட்டும் சாதி விட்டு சாதி திருமணம் செய்துகொண்டு ஓடிப்போனவளின் புருஷன் தானே நீ என்று என்னயும் என் மனைவி வடுவம்பாள் ஆகியோரை நோக்கி மேர்க்கண்ட ராஜா என்பவர் காம குரோத வார்த்தைகளால் திட்டி பறப்பயலகல்யாணம் பன்னிக்கிட்டு போனபப்யே வெட்டி கொலை செய்து போட்டிருந்தா நீ இன்னைக்கு பங்கு





வந்து கேட்ப்பியா என்று சொல்லி என்னுடன் இருந்த என் மனைவியை மானபங்கம் செய்ய முயற்சி செய்தார் நான் உடனே தடுத்த நிலையில் என்னை நோக்கி சுப்புலட்சுமி, கருணாநிதி, ராஜா என்கிற மணல் ராஜா ஆகியோர் கூட்டாக ஒரே குரலில் உன்னை அன்றைக்கே கொலை செய்யாமல் போச்சு, இப்ப உன்னை கொலை செய்கிறேன் பார் என்று என்னை நோக்கி ஓடிவந்த நிலையில் நானும் எனது மனைவியும் பயந்து அங்கிருந்து உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்ப்பட்டதால் நாங்கள் தப்பித்து வந்து தஞ்சை தாலுக்கா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம்.

இது சம்பந்தமாக அந்த காவல்நிலையத்தில் பணிபுரியும் காவல் ஆய்வாளர் பார்த்திபன் அவர்கள் வழக்கம்போல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை பிறகு மாவட்ட காவல் துறை துணை கண்காணிப்பாளர் (வல்லம் சரகம்) அவர்களிடமும் புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பிறகு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமும் மாவட்ட ஆட்சியர் அவர்களிடமும் மற்றும் உயரதிகாரிகளிடமும் நேரிலும் பதிவு தபாலிலும் புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எங்களுக்கு தஞ்சை பெரியகோவில் தெய்வமாவது நீதி வழங்குமா என்று கண்ணீர் மல்க கூறினார்.

- தொகுப்பு ஆசிரியர் M. ராமச்சந்திரன்



தற்போது நான் பிரச்சாரத்துக்கு வந்ததால், கொட்டகையில் உள்ளவர்களுக்கு ரூ.2 ஆயிரம் கிடைத்துள்ளது. கொள்ளையடித்த பணம் மக்களுக்குப் போனதில் எனக்கு மகிழ்ச்சி. 2 வேளை பிரியாணி போட்டுள்ளனர். சந்தோஷமாக சாப்பிட்டுவிட்டு, இரட்டை இலையில் வாக்களியுங்கள்.

திமுக ஆட்சிக்கு வந்து 21

# அதிமுக ஆட்சியில் மக்கள் ஏற்றம்; திமுக ஆட்சியில் ஏமாற்றம்:

**அதிமுக ஆட்சியில் ஏற்றம் அடைந்த மக்கள், திமுக ஆட்சியில் ஏமாற்றம் அடைந்துள்ளதாக அதிமுகஇடைக்கால பொதுச் செயலாளர் பழனிசாமி பேசினார்.**

ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் கே.எஸ்.தென்னரசுவை ஆதரித்து, வீரப்பம்பாளையம் பகுதியில் அவர் பேசியதாவது: அதிமுக ஆட்சியில், ஈரோடு கிழக்கு தொகுதியில் ரூ. 484 கோடியில் ஊராட்சிக்கோட்டை குடிநீர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால், திமுக ஆட்சி அமைந்து 21 மாதம் ஆன நிலையில், ஒரு துரும்பைக் கூட கிள்ளிப்போடவில்லை. இப்போது வீதி, வீதியாக வாக்கு கேட்டு வரும் அமைச்சர்கள், தேர்தலுக்கு முன்பு குறை கேட்க வரவில்லை. மக்களை ஏமாற்றுவதற்காக அமைச்சர்கள் புரோட்டோ போட்டும், டீ போட்டுக் கொண்டும் இருக்கிறார்கள்.

ஈரோடு கிழக்கு தொகுதியில் 120 இடங்களில் கொட்டகை அமைத்து, ஏழை வாக்காளர்களை ஆடு, மாடுகளைப்போல அடைத்து வைத்துள்ளனர். திமுகவுக்கு தைரியம் இருந்தால் வாக்காளர்களை நாங்கள் சந்திக்க அனுமதிக்க வேண்டும். அதிமுகவை எதிர்க்க தெம்பு, திராணி, சக்தி அவர்களிடம் இல்லை.

**ஈரோட்டில் பழனிசாமி பிரச்சாரம்**

மாதத்தில் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. எழுதாத பேனாவுக்கு ரூ.81 கோடியில் கடலில் நினைவுச்சின்னம் எதற்காக அமைக்க வேண்டும். திமுக ஆட்சியில் 7 லட்சம் பேருக்கு முதியோர் உதவித்தொகை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. பேனா நினைவுச்சின்னம் வைக்கும் தொகையை ஏழை முதியவர்களுக்கு கொடுக்கலாமே. இந்த தொகையைக் கொண்டு மாணவர்களுக்கு எழுதும் பேனா கொடுக்கலாமே.

அம்மா உணவகத்தை முடக்கப் பார்க்கின்றனர். அதிமுக ஆட்சியில் 53 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி கொடுத்தோம். அதை நிறுத்திவிட்டனர். உதயநிதி இங்கு வந்தால், நீட் தேர்வு ரத்து செய்யும் ரகசியத்தை சொல்லுமாறு கேளுங்கள். தேர்தல் வாக்குறுதிகளில் 85 சதவீதம் நிறைவேற்றி விட்டதாக ஸ்டாலின் பொய் சொல்கிறார். பொய் சொல்வதற்கு நோபல் பரிசு வழங்கினால், அதை ஸ்டாலினுக்கு வழங்கலாம். அதிமுக ஆட்சியில் மக்கள் ஏற்றம் அடைந்தார்கள். திமுக ஆட்சியில் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இவ்வாறு அவர் பேசினார். தொடர்ந்து பெரியவலசு, சம்பத்நகர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

- சிறப்பு செய்தி ஆசிரியர் G. வெங்கடேசன்

**தமிழகத்தில் சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களை மின் வாகன நகரங்களாக தமிழக அரசு அறிவித்துள்ளது.**

சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும், காற்று மாசுபாட்டைக் குறைக்கவும் எரிபொருள் வாகனங்களுக்கு மாற்றாக மின்சார வாகனங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழக அரசு முதல் கட்டமாக சென்னையில் மின்சார பேருந்துகளை இயக்க முடிவு செய்துள்ளது. மின்சார பேருந்துகளை வாங்க டெண்டர் கோரப்பட்டுள்ளது. இதைத் தவிர்த்து மின்சார இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

# தமிழகத்தின் மின் வாகன நகரங்களாக சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சேலம் நெல்லை அறிவிப்பு இலக்கு 10 ஆண்டுகள்

இந்நிலையில், தமிழகத்தின் 6 நகரங்களை மின் வாகன நகரங்களாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதன்படி சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்கள் மின்வாகன நகரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நகரங்களில் உள்ள பேருந்துகள் மற்றும் ஆட்டோக்களை அடுத்த 10 ஆண்டுகளில் முழுவதுமாக மின்சார வாகனங்களாக மாற்ற தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதன் விவரம்:

**ஸ்மார்ட் மொபிலிட்டி திட்டம்:** இந்தத் திட்டத்தில் 6 நகரங்களின் ஆணையர்கள் நோடல் அதிகாரியாக நியமிக்கப்படுவார்கள். இவர்களின் தலைமையில் ஸ்மார்ட் மொபிலிட்டி திட்டம் தயார் செய்யப்படும். இதன்படி அடுத்த 10 ஆண்டுகளில் இந்த நகரங்களில் உள்ள அரசு பேருந்துகள் மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்கள் மின்சார வாகனங்களாக மாற்ற இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த நகரங்களில் பொதுமக்கள் தனியார் பங்களிப்பு முறையில் அரசு சார்பில் சார்ஜிங் நிலையங்கள் அமைக்கப்படும்.

**இரு சக்கர வாகனங்கள்:** தமிழகத்தில் மின்சார இரு சக்கர வாகனங்கள் விற்பனை அதிகரித்து வருகிறது. கடந்த ஜனவரி மாதம் அதிகபட்சமாக ஏத்தர் நிறுவனத்தின் 1423 இரு சக்கர வாகனங்கள் விற்பனையாகி உள்ளது. மேலும் கடந்த ஜனவரி மாதம் வரை இந்த நிறுவனம் 7500 ஸ்கூட்டர்களை விற்பனை செய்துள்ளது. தமிழகத்தில் மொத்தம் பதிவாகி உள்ள வாகனங்களில் 78 சதவீத வாகனங்கள் இரு சக்கர வாகனங்கள் ஆகும். எனவே, பல்வேறு சலுகைகள் அளித்து மின்சார இரு சக்கர வாகன விற்பனை அதிகரிக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

- தலைமை ஆசிரியர் Dr. K. கலைச்செல்வன்



# செல்வமகள் விருது வழங்கும் விழா




**ராமநாதபுரம் மாவட்டம் பாம்பூர் கிராம அஞ்சல் துறை அலுவலகத்தில் 11:02:2023 அன்று நடந்த நிகழ்ச்சியான இந்திய அஞ்சலக துறையின் 10 வயதுக்குட்பட்ட பெண் குழந்தை களுக்கு உரிய பாதுகாப்பை வழங்கும் மகத்தான சேமிப்பு திட்டமான செல்வமகள் சேமிப்பு திட்டத்தின் வாயிலாக**

*மக்கள் உழல் தடுப்பு இயக்கத்தின்*

*மாநில பொருளாளர் மரியாதைக்குறிய திரு வி.ராமசந்திரன் தலைமையில்*

*ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் மரியாதைக்குரிய திருமதி. பதர் நிசாபேகம் முன்னிலையில்*

*மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் ராமநாதபுரம் மாவட்ட தலைவரான மரியாதைக்குறிய திரு தாமரைகணி அவர்கள் 100 பெண்குழந்தைகளுக்கு சேமிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் 25000 / ரூபாயினை முதல் தவணையாக இலவசமாக செலுத்தி சிறப்பித்தார்.*

*இதில்*

*சிறப்பு அழைப்பாளர்களாக பாம்பூர் ஊரட்சி மன்ற தலைவர் திருமதி.சகுந்தலா ரவிச்சந்திரன், பரமகுடி ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் திருமதி.தேவி ராமசாமி, அஞ்சலக சேமிப்பு கணக்கு மேலாளர் திரு.ரவீந்ரன், பரமகுடி அஞ்சலக துறை கண்காணிப்பாளர் திருமதி. சித்ரா மற்றும் மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தின் நிர்வாகிகள் பிரபாகரன், மலைராஜ், உபகாரம்,*

*சிவகாமி, திருமுருகன், கார்த்தி, சுரேஷ், மணிகண்டன், மாலா, நாகராஜன், ராஜ்குமார், வேலுசாமி மற்றும் அஞ்சல்துறை யில் பணிபுரியும் ரமேஷ் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.*

- செய்தி ஆசிரியர் M. ராமச்சந்திரன் (பரமகுடி)

புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயலில் குடிநீர்த் தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்ட சம்பவத்துக்குப் பிறகும் குடிநீர்த் தொட்டிகளை பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என சமூக ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.



# வேங்கைவயல் சம்பவத்துக்குப் பிறகும் பாதுகாக்கப்படாத குடிநீர்த் தொட்டிகள்:

## சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு

வேங்கைவயல் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சிபிசிஐடி போலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. இந்நிலையில், வருங்காலங்களில் இது போன்ற சம்பவம் வேறு எங்கும் நடக்காமல் இருக்கும் வகையில், குடிநீர்த்தொட்டிகளை முறையாக பாதுகாத்து பராமரிப்பதில் ஊரக வளர்ச்சித் துறையினர் அக்கறை காட்டவில்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுகுறித்து ஜனநாயக வாலிபர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ஆர்.குமாரவேல் கூறியது: மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மேல் பகுதிக்கு செல்வதற்கான ஏணியின் நடுவில் இரும்பு கதவு அமைத்து பூட்டி பராமரித்து வந்திருந்தால் இந்த சம்பவத்தை தவிர்த்திருக்கலாம். இந்த சம்பவத்துக்கு பிறகாவது தமிழகம் முழுவதும் இந்த நடைமுறையை முறையாக அமல்படுத்தி இருக்க வேண்டும். அதையும் அரசு செய்யவில்லை.

மாதம் 2 முறை சுத்தம் செய்ய வேண்டும்: மேலும், மாதத்துக்கு 2 முறை குடிநீர்த் தொட்டிகள் சுத்தம் செய்ய வேண்டும் என்பது ஏட்டளவில் மட்டுமே உள்ளது. அதை கண்டிப்பாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்றார்.

இது குறித்து மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களிடம் கேட்டபோது, ‘‘வேங்கைவயல் சம்பவத்துக்குப் பின்னர் மேல்நிலை குடிநீர்த் தொட்டிகளில் பொருத்தப்பட்டுள்ள ஏணிகளில் உள்ள கதவுகளைப் பூட்டி வைக்குமாறும், மாதத்துக்கு 2 முறை குடிநீர்த்தொட்டியை சுத்தம் செய்யவும் அந்தந்த ஊராட்சி நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது’’ என்றனர்.

-கௌரவ இணை ஆசிரியர் S.பதர்னிஷாபேகம்



# நீர்வாழ் உயிரினங்களின் நோய்களை கண்டறிய தேசிய அளவிலான கண்காணிப்பு திட்டம்:

## மத்திய அமைச்சர்கள் தொடங்கிவைத்தனர்

**நீர்வாழ் உயிரினங்களின் நோய்களைக் கண்டறியும் வகையில், தேசிய அளவிலான கண்காணிப்புத் திட்டத்தை மத்திய அமைச்சர்கள் பர்ஷோதம் ரூபாலா, எல்.முருகன் ஆகியோர் தொடங்கிவைத்தனர்.**

இந்திய வெள்ளை இறால் மரபணு மேம்பாட்டு மைய அடிக்கல் நாட்டு விழா சென்னையில் உள்ள மத்திய மீன்வளத் துறை ஆராய்ச்சி மற்றும் உவர்நீர் மீன் வளர்ப்பு நிறுவனத்தில் (ஐசிஏஆர்சிபா) நடைபெற்றது. மத்திய மீன்வளத் துறை அமைச்சர் பர்ஷோதம் ரூபாலா, இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் அடிக்கல் நாட்டி வைத்தனர்.

தொடர்ந்து, நீர்வாழ் உயிரினங்களின் நோய்களைக் கண்டறிவதற்காக, மத்திய மீன்வளத் துறை அமைச்சகத்தின் தேசிய கண்காணிப்புத் திட்ட 2வது கட்டத்தையும் அமைச்சர்கள் தொடங்கிவைத்தனர். தொடர்ந்து, இறால் வளர்ப்பு, மீன் வளம் ஆராய்ச்சி குறித்த கண்காட்சியை அமைச்சர்கள் பார்வையிட்டனர். இந்த நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் பர்ஷோதம் ரூபாலா பேசியதாவது:

தமிழக கடல் எல்லைகளில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள இந்த திட்டத்துக்கு ரூ.33.78 கோடிஒதுக்கப்பட்டுள்ளது. இந்திய கடல் எல்லைகளில் அடுத்த 3 முதல் 5 ஆண்டுகளில் மீன்வளம் பெருக்குதல் மற்றும் பலவித மீன்கள் உற்பத்திக்கான திட்டங்கள் சாத்தியமாக்கப்பட உள்ளன.

மீன்களுக்கு ஏற்படும் நோய்கள் குறித்து தகவல் தெரிவிக்கவும், அறிவியல்பூர்வமான உள்ளீடுகள் கிடைப்பதற்கும், ரிப்போர்ட் ஃபிஷ்டிசீஸ் என்ற செயலி தொடங்கப்பட்டுள்ளது. மீன்களுக்கு ஏற்படும் நோய்கள் குறித்த தகவல்களை நேரடியாக மாவட்ட மீன்வள அதிகாரிகளுக்குத் தெரிவிப்பதற்கும், தொழில்நுட்ப உதவியைப் பெற்று, பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் இந்த செயலி உதவும்.

மத்திய அரசின் தொடர் நடவடிக்கையால் மீன்வளம் பெருகி உள்ளது. 2024 25ம் ஆண்டுக்குள் ரூ.1 லட்சம் கோடி அளவில் கடல் சார்ந்த பொருட்களை ஏற்றுமதி செய்வதே நமது இலக்கு. இவ்வாறு அவர் பேசினார்.

கடல் பாசிப் பூங்கா: இணை அமைச்சர் எல்.முருகன்பேசும்போது, "கொச்சி, சென்னை, விசாகப்பட்டினம், மகராஷ்டிரா உள்ளிட்ட 5 இடங்களில் உள்ள மீன்பிடித் துறைமுகங்களை சர்வதேச தரத்துக்கு உயர்த்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தியாவில் முதல்முறையாக தமிழ்நாட்டுக்கு ரூ.126 கோடியில் கடல் பாசிப் பூங்கா திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது. கடந்த2014ம் ஆண்டு முதல் இதுவரை தமிழ்நாட்டுக்கு ஏறத்தாழ ரூ.3ஆயிரம் கோடி நிதி வழங்கிஉள்ளோம்" என்றார்.

இந்த நிகழ்ச்சியில், மத்திய மீன்வளத் துறை செயலர் ஜந்திரா நான் ஸ்வைன், மீன்வள ஆராய்ச்சி துணை இயக்குநர் ஜே.கே. ஜெனா, கடல்சார் மீன்வள இணை இயக்குநர் ஜெ.பாலாஜி, தமிழ்நாடு அரசின் மீன்வளம், மீனவர் நலத் துறை செயலர் கார்த்திக், 'ஐசிஏஆர்சிபா' இயக்குநர் குல்தீப் கே.லால், தேசிய மீன்வள மரபணு அமைப்பு (லக்னோ) இயக்குநர் யு.கே.சர்கார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

- இணை ஆசிரியர் புதுவை K. ராஜாராம்குமார்




# தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் 3 ஆண்டுகளாக பூட்டிக் கிடக்கும் பயணிகள் தங்கும் அறைகள்...

**தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் கடந்த 3 ஆண்டுகளாக பயணிகள் தங்கும் அறைகள் பூட்டியே கிடப்பதால், பயணிகள் தங்க முடியாமல் சிரமமடைந்து வருகின்றனர். எனவே, இதை விரைவில் திறந்து பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.**

தஞ்சாவூர் ரயில் நிலையத்தின் வழியாக நாள்தோறும் 60க்கும் மேற்பட்ட ரயில்கள் வந்து செல்கின்றன. இங்கு, பயணிகள் வசதிக்காக ரயில்வே நிர்வாகம் சார்பில் பயணிகள் தங்கும் அறைகள் பல ஆண்டுகளாக பராமரிக்கப்பட்டு வந்தன. இங்கு, தலா 5 குளிர்சாதன மற்றும் சாதாரண அறைகள் உள்ளன. இவற்றுக்கு குறைந்த வாடகையே வசூலிக்கப்பட்டதால், பயணிகள் இந்த அறைகளை பயன்படுத்தி வந்தனர்.

இதனிடையே, கரோனா ஊரடங்கு தொடங்கியதும் இந்த அறைகள் மூடப்பட்டன. ஆனால், இயல்புநிலை திரும்பி ஓராண்டுக்கு மேல் ஆகியும் இதுவரை இந்த அறைகள் மீண்டும் திறக்கப்படவில்லை. தொடர்ந்து 3 ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளதால், இந்த அறைகள் பராமரிப்பின்றி சேதமடைந்து வருவதுடன், அறைகளில் இருந்த குளிர்சாதன இயந்திரங்களும் பழுதடைந்துவிட்டன.

இதனால், தஞ்சாவூர் ரயில் நிலையத்துக்கு வரும் பயணிகள், ரயில் நிலையத்துக்கு வெளியே உள்ள தனியார் தங்கும் விடுதிகளில் அதிக வாடகை கொடுத்து தங்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. எனவே, 3 ஆண்டுகளாக மூடப்பட்டுள்ள இந்த ரயில் நிலைய தங்கும் அறைகளை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து காவிரி டெல்டா ரயில் பயணிகள் சங்கச் செயலாளர் வெ.ஜீவக்குமார் கூறும்போது, "கரோனா தளர்வுக்குப் பிறகு ரயில்கள் அனைத்தும் இயக்கப்பட்டு இயல்பு நிலைக்கு திரும்பியும், தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் உள்ள தங்கும் அறைகள் இன்னும் திறக்கப்படாமல் மூடியே உள்ளன. எனவே, இதை உடனடியாக திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

இதுதொடர்பாக தஞ்சாவூர் ரயில் நிலைய அதிகாரிகளிடம் கேட்டபோது, "திருச்சி கோட்டத்தில் உள்ள முக்கிய ரயில் நிலையங்களில் மூடப்பட்ட தங்கும் அறைகள் திறக்கப்பட்டுள்ள நிலையில், தஞ்சாவூரில் உள்ள தங்கும் அறைகளையும் திறக்க வேண்டும் என உயர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளோம்.

தற்போது, இந்த அறைகள் ஐஆர்சிடிசி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்கள் விரைவில் பராமரிப்பு பணிகளைத் தொடங்குவதாக கூறியுள்ளனர். இன்னும் ஓரிரு மாதங்களில் இந்த அறைகள் பயன்பாட்டுக்கு வரும்" என்றனர்.

- புகைப்பட நிருபர் மதிவிழி



# தமிழ்நாடு மின்வாகனக் கொள்கை 2023

**தமிழ்நாடு மின்வாகனக் கொள்கை 2023ஐ முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.**

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாகனக் கொள்கை 2023–யை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பின் விவரம்:

தமிழ்நாடு மின்வாகனக் கொள்கையின் அவசியம்: மோட்டார் வாகனங்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் உற்பத்தியில் மட்டுமின்றி, மின்வாகன உற்பத்தியிலும், தமிழகம் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்நிலையை தக்க வைத்து, மேம்படுத்திடவும், மாறிவரும் காலச் சூழ்நிலைக்கேற்ப மின்வாகன உற்பத்தித் துறையில் உள்ள சவால்களை திறமையுடன் எதிர்கொள்ளும் வகையிலும், ஒரு மாறுபட்ட கொள்கை அணுகுமுறையும், தற்போதைய கொள்கையில் சில மாற்றங்களும் தேவைப்படுகிறது.

ஆகவே, மின்சார வாகனங்கள் பயன்படுத்துவதை வெகுவாக அதிகரித்திடும் நோக்கத்திலும், விநியோகம், தேவைகள், பயன்பாடுகள் மற்றும் சூழல் அமைப்பை நன்கு வலுப்படுத்திடும் வகையிலும் தமிழ்நாடு மின்சார வாகனக் கொள்கை 2023 என்ற திருத்திய கொள்கையை முதல்வர் வெளியிட்டார். இந்தக் கொள்கை, வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஐந்து வருடங்கள் நடைமுறையில் இருக்கும்.



# முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்

கொள்கையின் இலக்கு: மின்வாகன உற்பத்தித்துறையில் 50 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள் மற்றும் 1.50 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதே இந்த தமிழ்நாடு மின் வாகன கொள்கை 2023 யின் முக்கிய நோக்கமாகும்.

சிறப்பம்சங்கள்: பொது போக்குவரத்து திட்டங்களை மின்மயமாக்குதல் மற்றும் ஸ்மார்ட் மொபிலிட்டி திட்டங்களை ஊக்குவித்தல் போன்ற காரணங்களுக்காக பிரத்தியேகமாக மின் வாகன நகரங்கள் உருவாக்குதல், சரக்கு மற்றும் சேவை வரி திரும்ப வழங்குதல், மூலதன மானியம், விற்றுமுதல் அடிப்படையிலான மானியம், சிறப்பு மேம்பட்ட மின்கல வேதியியல் (Advanced Chemistry Cell – ACC) சலுகை என பல்வேறு வகைப்பட்ட முதலீட்டு சலுகைகளில் ஏதேனும் ஒன்று மற்றும் பிற சலுகைகளும் பெற வாய்ப்புகள்;

சிறப்பு ஊக்கச் சலுகைகள்: மின்னேற்ற நிலையங்களுக்கான ஊக்க சலுகைகள், பொது மின்கல மாற்று நிலையங்களுக்கான ஊக்கச் சலுகைகள், சாலை வரி விலக்கு, பதிவுக் கட்டணம் மற்றும் அனுமதி கட்டணம் தள்ளுபடி ஆகிய பயன்கள் 31.12.2025 வரை நீட்டிப்பு செய்தல். மின் ஆட்டோகளுக்கான பதிவு மேற்கொள்ளுதலில் இருந்து விலக்கு அளிப்பதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் E-2W மற்றும் E-4W வாகனங்களுக்கு வர்த்தக அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், மின் வாகன மின்னேற்றுதலுக்கான கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளுதல் மற்றும் மின்னேற்று நிலையங்களை அமைப்பதற்கான மூலதன மானியம் வழங்குதல்.

திறன் மேம்பாடு, புதிய கட்டடங்கள், ஏற்கனவே உள்ள அடுக்குமாடி குடியிருப்புகள், குடியிருப்பு நகரியங்கள் ஆகியவற்றுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட மின்சார வாகன மின்னேற்று உள்கட்டமைப்புக்கான மாதிரி கட்டட விதிகள் (Model Building Bye-laws - MBBL) 2016க்கு ஏற்ப தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகளில் திருத்தம் மேற்கொள்ளுதல்.

மின் வாகனச் சூழலமைப்பினை மேம்படுத்தும் வகையில், மின் வாகன தொழிற் பூங்காக்கள் அமைத்தல் மற்றும் விற்பனையாளர் சூழலமைப்பு உருவாக்குதல், பிரத்யேகமாக மின்வாகன இணையதளம் உருவாக்குதல் மற்றும் வழிகாட்டி நிறுவனத்தில் மின்வாகன ஆதரவுச் சேவை பிரிவு உருவாக்குதல். சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களை மின் வாகன நகரங்களாக மேம்படுத்துதல் போன்ற பணிகளுக்காக தலைமைச் செயலாளர் தலைமையில், முக்கியத் துறைகளின் செயலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட மின் வாகன வழிகாட்டுதல் குழுவை மாற்றி அமைத்து, இக்கொள்கையை நடைமுறைப்படுத்தும் ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**- ஆசிரியர் K. மதுசூதனன்**

# திருப்பூரில் செல்லா காசானதா ரூ.10 நாணயங்கள்?

## வாங்க மறுப்பதால் பொதுமக்கள் அவதி

**இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட ரூ.10 நாணயங்களை வாங்க மறுப்பதும், செல்லாது எனக் கூறுவதும், கொடுக்கவோ, வாங்கவோ மறுப்பதோ சட்டப்படி குற்றம் எனவும், ரூ.10 நாணயங்களை வாங்க மறுக்கும் நபர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.**

ஆனால் திருப்பூர் மாவட்டத்தில் கடைகள், பேருந்து நடத்துநர்கள் என பல்வேறு தரப்பினரும் ரூ.10 நாணயத்தை வாங்க மறுப்பதாக புகார் எழுந்துள்ளது. இது தொடர்பாக சமூக ஆர்வலர்கள் கூட்டமைப்பு சார்பில் ஆ.அண்ணாதுரை கூறியதாவது: திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அரசுப் பேருந்துகளிலும், பல்வேறு கடைகளிலும் ரூ.10 நாணயத்தை வாங்க மறுக்கின்றனர்.

கடந்த 2005ம் ஆண்டு இந்திய அரசு ரூ.10 நாணயங்களை வெளியிட்டது. அன்று முதலே இந்த நாணயத்தின் பயன்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த தவறியதால், தற்போது இந்நிலை ஏற்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வங்கிகளும், தமிழக அரசு போக்குவரத்துத் துறை அதிகாரிகள், வியாபாரிகள் உள்ளிட்ட அனைத்து வர்த்தகர்களையும் அழைத்துப் பேசி ரூ.10 நாணயத்தை வாங்க வேண்டும் என அறிவுறுத்த வேண்டும்.

ரூ.10 நாணயத்தை வாங்க மறுப்பவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல ரேஷன் கடை விற்பனையாளர்கள் கூட இந்த நாணயத்தை வாங்க மறுக் கின்றனர். தேவையற்ற அவ நம்பிக்கையுடன் ரூ.10 நாணயங்களை இவர்கள் புறக்கணிப்பதால், தற்போது மதிப்பு நீக்கம் செய்யப்பட்ட நாணயமாகவே மாறிவிட்டது.

இது தொடர்பாக திருப்பூர் மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை மேற்கொண்டு, ரூ. 10 நாணயத்தை அனைத்து தரப்பினரும் வாங்க வேண்டும் என்ற அறிவிப்பை வெளியிட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



- சிறப்பு துணை ஆசிரியர்: Dr. S. முகமது அலி

# பொது வழிப்பாதை ஆக்கிரமிப்புக்கு எதிராக வாக்காளர் அட்டை, ரேஷன் கார்டு ஒப்படைக்க வந்த கிராம மக்கள்

காடையாம்பட்டி அருகே பொது வழிப்பாதை ஆக்கிரமிப்பால் பொதுமக்கள் கோபம் அடைந்த நிலையில், வாக்காளர் அடையாள அட்டை, ரேஷன் கார்டு மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சேலம் மாவட்டம் காடையாம்பட்டி அருகே உள்ள கோட்டைமேடு பகுதியில் 20க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இவர்கள் அந்தப் பகுதியில் உள்ள ஓடலூர் ஏரி வாய்க்கால் கரைமேல் நடைபாதையாகவும், மயானத்துக்கு செல்லும் வழியாக பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில், மக்கள் பயன்பாட்டுக்கு உண்டான பொதுவழி பாதையை, அதே பகுதியைச் சேர்ந்த சிலர் ஆக்கிரமித்துள்ளதால், நடைபாதை வசதியில்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதையடுத்து, சேலம் ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த மக்கள் குறைதீர் கூட்டத்துக்கு, காடையாம்பட்டி, கோட்டமேடு பகுதியைச் சேர்ந்த பத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தினர், கைக்குழந்தைகளுடன் வாக்காளர் அடையாள அட்டையை ஒப்படைக்கும் போராட்டத்துடன் வந்தனர். ஆட்சியர் அலுவலக பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸார், பொதுமக்களை உள்ளே செல்ல அனுமதி மறுத்தனர்.



பொது வழிப்பாதையை மீட்கவில்லை என்றும், இல்லையெனில் வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம் மற்றும் ரேஷன் கார்டுகளை ஒப்படைக்க போவதாக முழக்கமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர், போலீஸார் அவர்களை சமாதானம் செய்து, மக்கள் குறை தீர் கூட்டத்தில் மனு அளிக்க சிலரை மட்டும் ஆட்சியர் அலுவலகத்துக்குள் செல்ல அனுமதி அளித்தனர். இதையடுத்து, பொதுமக்கள் ஆட்சியர் அலுவலகம் முன்பு இருந்து கலைந்து சென்றனர்.

- முதன்மை ஆசிரியர் Dr. P. முருகேசன்

# நாகர்கோவில் மாவட்ட மக்கள் ஊழல் தடுப்பு இயக்கதின் முயற்சியால் தண்ணீர் தட்டுப்பாடு முடிவுக்கு வந்தது!

★ ஆளூர் மக்களின் ஆதங்கம்

**நாகர்கோவில், ஜன.20–**

ஆளூர் பகுதியை மாநகராட்சியுடன் சேர்த்த போதும் இங்கு தண்ணீர் தட்டுப்பாடு தாங்க முடியல என மாநகராட்சி கமிஷனரிடம் மாநில மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம் சார்பில் மனு அளிக்கப்பட்டு உள்ளது.

மாநில மக்கள் ஊழல் தடுப்பு இயக்க மாநில துணை தலைவர் முகமது அலி சார்பில் மாநகராட்சி கமிஷனரிடம் கொடுக்கப்பட்டுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

நாகர்கோவில் மாநகராட்சி 1வது வார்டு ஆளூர் பகுதியை மாநராகாட்சியுடன் இணைத்த நாள் முதல் தண்ணீர் குழாய்களில் தண்ணீர் வருவது மிக குறைவாக உள்ளது. அளூர் பேரூராட்சியாக இருந்த போது 4,50,000 லிட்டர்கொள்ளவு கொண்ட தண்ணீர் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு 7 ஆண்டாகியும் திறக்கப்படாமல் பயன்படாமல் உள்ளது. ஆளூர் முதல் வார்டுக்கு ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. எந்த பயனுமில்லை. இந்த பகுதிக்கு களியலில் இருந்து கூட்டு குடிநீர் திட்டம் மூலம் தண்ணீர் வருகிறது.

ஆளூர் பேரூராட்சியாக இருந்த போது ஒருநாள் விட்டு ஒரு நாள் மிக தாராளமாக தண்ணீர் வந்தது. இப்போது 2 நாட்களுக்கு ஒரு முறை பற்றாக்குறையாக தண்ணீர் வருகிறது. எனவே போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து தண்ணீர் பற்றாக்குறையை சீரமைக்க வேண்டும் என கேட்டு கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

இதில், சர்வதேச இணை அமைப்பு செயலாளர் முருகேசன், மாவட்ட தலைவர் செய்யது மீர்காசிம், மாவட்ட செயலாளர் பிரபாத் சிங், செய்தி தொடர்பாளர் காஜா முஹைறதீன், ஆளூர் ஜமாத் முன்னாள் செயலாளர் புஹாரி உள்பட பலர் உடன் இருந்தனர்.



■ மாநகராட்சி கமிஷனரிடம் மனு கொடுத்த மாநில மக்கள் ஊழல் தடுப்பு இயக்கத்தினர்.

- முதன்மை ஆசிரியர் R.M நந்தினி



# விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளார்!

## பழ.நெடுமாறன் அறிவிப்பு; இலங்கை ராணுவம் மறுப்பு

**வி**டுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்று உலகத் தமிழர்பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த 2009 மே மாதம் நடந்த உச்சகட்ட போரில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டதாக இலங்கை ராணுவம் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. அவர் சுடப்பட்டு சடலமாக கிடப்பது போன்ற புகைப்படத்தையும் வெளியிட்டது.

இந்நிலையில், பிரபாகரன் உயிருடன் இருப்பதாக உலகத் தமிழர்பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் புதிய தகவலை வெளியிட்டுள்ளார். இதுதொடர்பாக, தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் செய்தியாளர்களிடம் அவர் நேற்றுகூறியதாவது:

தமிழ்ஈழ தேசியத் தலைவர் பிரபாகரன் நலமுடன் இருக்கிறார் என்கிற நற்செய்தியை உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கு உறுதியாக தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இதுவரை அவரை பற்றி திட்டமிட்டு பரப்பப்பட்ட ஊகங்கள், சந்தேகங்களுக்கு இது முற்றுப்புள்ளி வைக்கும் என்று நம்புகிறோம்.

இலங்கை தமிழ் மக்களின் விடியலுக்கான திட்டத்தை பிரபாகரன் விரைவில் அறிவிக்க இருக்கிறார்.

தற்போது இந்திய எதிர்ப்பு தளமாக இலங்கையை ஆக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளதையும், சீனாவின் பிடியில் இந்தியப் பெருங்கடல் பகுதி சிக்கும் அபாயம் இருப்பதையும் எண்ணிப் பார்த்து, அதை தடுக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.

இந்த முக்கியமான காலகட்டத்தில் தமிழக அரசும், இங்குள்ள கட்சிகளும், தமிழக மக்களும் ஒன்றுபட்டு நின்று, பிரபாகரனுக்கு துணைநிற்கவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

பின்னர், செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

**பிரபாகரனுடன் நீங்கள் பேசினீர்களா? அல்லது அவர் உங்களை தொடர்பு கொண்டாரா?**

பிரபாகரனின் குடும்பத்தினருடன் எனக்கு தொடர்பு உண்டு. அந்த தொடர்பின்மூலம் நான் அறிந்த செய்திகளை, அவர்களது அனுமதியின் பேரில் தெரிவித்துள்ளேன்.

**பிரபாகரன் எங்கு இருக்கிறார்? எப்போது வருவார்?**

உங்களை போலவே இதை நானும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். விரைவில் அவர் வெளிப்படுவார்.

**பிரபாகரனின் மனைவி, மகள் குறித்து ஏதேனும் தகவல் உண்டா?**

நன்றாக நலமுடன் உள்ளனர்.

**இத்தனை ஆண்டு காலம் கழித்து இப்போது இதை தெரிவிக்க என்ன காரணம்?**

சர்வதேச சூழல் தற்போது கனிந்திருக்கிறது. எந்த இலங்கை மக்கள் ராஜபக்சவை ஆட்சியில் அமரவைத்தனரோ, அதே மக்கள் அவருக்கு எதிராக கொதித்து எழுந்து போராடி, ஆட்சியில் இருந்து விரட்டி அடிக்கின்றனர். இலங்கை மக்களுக்கு இப்போதுதான் உண்மை புரியத் தொடங்கியுள்ளது. இதைவிட சாதகமாக வேறு எந்த சூழல் உருவாக முடியும்.

இந்த செய்தி இலங்கை மக்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி, நம்பிக்கையை கொடுக்கும். இப்போது அவர்களுக்கு யானை பலம் கிடைத்துள்ளது. அவர்கள் நிச்சயம் பிரபாகரனுக்கு பின்னால் அணிவகுத்து நிற்பார்கள்.

இவ்வாறு அவர் கூறினார். உலகத் தமிழர் பேரமைப்பின் துணைத் தலைவர் சி.முருகேசன், துணைச் செயலாளர் துரை.குபேந்திரன், இலங்கை கவிஞர் காசி. ஆனந்தன், சமதா கட்சிதேசிய பொதுச் செயலாளர் என்.ஏ.கோன் உடன் இருந்தனர். அனைவருக்கும் நெடுமாறன் இனிப்பு வழங்கினார்.

மத்திய, மாநில அரசுகளின் உளவு அமைப்புகள் தீவிர விசாரணை நெடுமாறனிடம் விசாரிக்கமுடிவு: விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளதாக பழ.நெடுமாறன் தெரிவித்ததை தொடர்ந்து, பிரபாகரன் தொடர்பான தகவல்களை மத்திய, மாநில உளவுப் பிரிவினர் மீண்டும் திரட்டி வருகின்றனர். இதுகுறித்து நெடுமாறன் மற்றும் அவரது ஆதரவாளர்களிடம் விசாரணை நடத்தவும் திட்டமிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்று பழ.நெடுமாறன் நேற்று தெரிவித்தார். அவரது இந்த கருத்துக்கு இலங்கை ராணுவம் உடனடியாக மறுப்பு தெரிவித்தது.

இது ஒருபுறம் இருக்க, நெடுமாறனின் இந்த கருத்தை முழுமையாக புறந்தள்ளிவிட முடியாது என்பதால், பிரபாகரன் பற்றிய தகவல்களை மீண்டும் திரட்ட மத்திய உளவு பிரிவினர் உத்தரவிட்டுள்ளனர்.

பிரபாகரன் தொடர்பான தகவல்களை தமிழக க்யூ பிரிவு போலீஸாரும் திரட்டத் தொடங்கியுள்ளனர். தமிழக காவல் துறையின் உளவுப் பிரிவு கூடுதல் டிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம், அப்பிரிவு ஐ.ஜி. செந்தில்வேலன், க்யூ பிரிவு எஸ்.பி. கண்ணம்மாள் தலைமையிலான போலீஸார் மீண்டும் விசாரணையில் இறங்கியுள்ளனர். பிரபாகரன் மரணமடைந்ததாக ஏற்கெனவே



திரட்டப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் மீண்டும் கையிலெடுக்கப்பட்டு புலனாய்வு நடத்தப்பட்டு வருகிறது. பிரபாகரன் குறித்து வெளியிட்ட தகவல் தொடர்பாக நெடுமாறன் மற்றும் அவரது ஆதரவாளர்களிடம் விசாரணை நடத்தவும் உளவுப் பிரிவினர் முடிவு செய்துள்ளனர். நெடுமாறன் மற்றும் அவரது தொடர்புடையவர்களின் நடமாட்டம் கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

**இலங்கை ராணுவம் திட்டவட்டமாக மறுப்பு:** பிரபாகரன் உயிருடன் உள்ளதாக நெடுமாறன் கூறிய தகவலை இலங்கை ராணுவம் மறுத்துள்ளது. இதுகுறித்து இலங்கை ராணுவ செய்தி தொடர்பாளர் ரவி ஹேரத் கூறியபோது, "இறுதி போரின்போது, 2009ம் ஆண்டு மே 18ம் தேதி பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார். அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. பிரபாகரன் கொல்லப்பட்டதை டிஎன்ஏ ஆதாரம் மூலம் உறுதி செய்தோம். பிரபாகரன் உயிருடன் இருப்பதாக சொல்லப்படுவது தவறான தகவல்கள். இதில் சந்தேகமே இல்லை" என்றார்.

- முதன்மை ஆசிரியர் C.J. சுதர்மன்




# மதுரை எய்ம்ஸ் கட்டுமான பணிகள்

# 2024 இறுதியில் தொடங்கி 2028ல் நிறைவு பெறும்:

## மா.சுப்பிரமணியன் தகவல்

**மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிகள் 2024ம் ஆண்டு இறுதியில் துவங்கி, 2028 ல் முடிக்கப்படும் என ஜப்பான் நிதி நிறுவனம் தெரிவித்துள்ளதாக மருத்துவத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.**

*சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன், "2015 16ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மத்திய அரசு எய்ம்ஸ் மருத்துவமனை தொடர்பாக அறிவித்தது. 2018ல் மதுரையில் 750 படுக்கை வசதிகளுடன் கூடிய எய்ம்ஸ் மருத்துவமனை 45 மாதங்களில் கட்டி முடிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். எய்ம்ஸ் மருத்துவமனைக்கு தேவையான நிலத்தினை அதிமுக அரசு உரிய நேரத்தில் வழங்கியது.*

*ஆனால், மத்திய அமைச்சர், நிலம் வழங்குவதில் தாமதம் ஆகியது என்று தெரிவித்துள்ளார். எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நிலம் தொடர்பாக பிரச்சினை இல்லை.*

ஆனால், மத்திய அரசு அதனை மட்டுமே தெரிவித்து வருகிறது. நிலம் வழங்கப்பட்டதால் மட்டுமே சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டது

தற்போது 100 மாணவர்கள் ராமநாதபுரம் மருத்துவக் கல்லூரியில் பயின்று வருகின்றனர். மருத்துவ சேவை வழங்கும் பட்சத்தில் மட்டுமே எய்ம்ஸ் வந்ததாக அர்த்தம். தமிழகத்திற்கு அறிவித்த அதேநேரத்தில்தான் அசாம், காஷ்மீர், ராஜஸ்தான், ஜெய்பூர், தெலங்கானா போன்ற மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.



ஆனால், தமிழகத்திற்கு மட்டும் நிதி வழங்குவதில் பாரபட்சம் பார்க்கப்படுகிறது. அதிமுக அரசு கேட்டுப் பெற்றிருக்க வேண்டும். அப்படி பெற்றிருந்தால் தற்பொழுது எய்ம்ஸ் மருத்துவமனை செயல்பாட்டிற்கு வந்திருக்கும்.

தமிழகத்தில் கோவை, மதுரை, கீழ்ப்பாக்கம் போன்ற 3 இடங்களில் ரூ.1388 கோடி மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகள், ஜப்பான் பன்னாட்டு நிதியின் கீழ் நடைபெற்றவருகிறது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திற்கும் வழங்காமல், ஜப்பான் நிதி உதவி மருத்துவதுறையில் தமிழகத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தமிழகத்தின் மருத்துவ கட்டமைப்பிற்கு ஜப்பான் பயணத்தின்போது நிதி கோரப்பட்டது.

மதுரை எய்ம்ஸ்க்கும் நிதி வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை வைக்கப்பட்டது. அதற்கு விளக்கமளித்த ஜெய்க்கா அமைப்பு, எய்ம்ஸ் மருத்துவமனை கட்டமைப்புக்கு ஏப்ரலில் தான் டெண்டர் பணி நடைபெறும். 2024 இறுதியில் தான் எய்ம்ஸ் கட்டுமான பணிகள் துவங்கும். 2028 ல் தான் எய்ம்ஸ் பணிகள் முடிவடையும் என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளது" என்று அமைச்சர் கூறினார்.

முன்னதாக, மதுரை எய்ம்ஸ் விவகாரம் தொடர்பாக மக்களவையில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, திமுக எம்.பி.க்கள் இடையே நேற்று காரசாரமாக விவாதம் நடைபெற்றது.

- கௌரவ ஆசிரியர் Dr. குமரவேல்





# தூத்துக்குடி துப்பாக்கி சூடு விவகார வழக்கில் சிக்கிய போலீஸ் அதிகாரிகள் மீதான நடவடிக்கை குறித்த ஆய்வு தொடக்கம்

**தூத்துக்குடி துப்பாக்கி சூடு விவகாரத்தில் தொடர்புடைய ஐபிஎஸ் உட்பட போலீஸ் அதிகாரிகள் மீது எடுக்கப்பட உள்ள நடவடிக்கை குறித்து ஆய்வு தொடங்கி உள்ளது. இதன் முன்னோட்டமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தனித்தனியாக தன்னிலை விளக்கம் கேட்டு பெறப்பட்டுள்ளது. இதனால், தூத்துக்குடி துப்பாக்கி சூடு விவகாரம் மீண்டும் சூடுபிடித்துள்ளது.**

தூத்துக்குடியில் செயல்பட்டு வந்த ஸ்டெர்லைட் ஆலையை மூடக் கோரி தொடர் போராட்டம் 2018ல் நடைபெற்றது. 100வது நாளாக 22.05.2018 அன்று நடைபெற்ற போராட்டம் கலவரமாக மாறியது. இதில், காவல் துறையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் 11 ஆண்கள், 2 பெண்கள் என 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 40 பேர் பெரிய அளவிலும், 64 பேர் சிறிய அளவிலும் காயமடைந்தனர். கடந்த அதிமுக ஆட்சியின்போது நடைபெற்ற இந்த சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருந்தது.

இந்த துப்பாக்கி சூடு விவகாரம் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் 23.05.2018ல் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. விசாரணை ஆணையம் பல்வேறு தரப்பினரிடம் விசாரணை நடத்தி வாக்குமூலங்களை பதிவு செய்தது. விசாரணை ஆணையத்தின் இறுதி அறிக்கை அரசிடம் 18.05.2022 அன்று சமர்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கடந்தாண்டு அக்டோபரில் தமிழக சட்டப் பேரவையில் ஆணையத்தின் அறிக்கை 4 பகுதிகளாக தாக்கல் செய்யப்பட்டது.

அதில், 'ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தின் 100வது நாளையொட்டி போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் வன்முறையில் இறங்க வாய்ப்புள்ளதாக முன்கூட்டியே

தூத்துக்குடி மாவட்ட காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவில்லை. இது காவல்துறை, மாவட்ட நிர்வாகத்தின் குறைபாடு, அலட்சியம் ஆகும். காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு இல்லை.

சுடலைக்கண்ணு என்ற காவலர் மட்டும் அபாயகரமான துப்பாக்கியால் 17 ரவுண்டுகள் சுட்டுள்ளார். அவரை 4 இடங்களில் வைத்து சுட வைத்துள்ளதன் மூலம், அவரை அடியாள் போல் காவல்துறை பயன்படுத்தியுள்ளது. போராட்டம் நடத்தியவர்கள் மீது போலீஸார் மறைந்திருந்து துப்பாக்கியால் சுட்டுள்ளனர்.

துப்பாக்கி சூடு நடைபெறும்போது கடைபிடிக்க வேண்டிய அணுகுமுறைகள் பின்பற்றப்படவில்லை. காவல்துறையினர் வரம்பு மீறியும், அத்து மீறியும் செயல்பட்டு இருக்கிறார்கள் என பல்வேறு குற்றச்சாட்டுகளை முன் வைத்திருந்தது. மேலும், துப்பாக்கி சூடு விவகாரத்தில் மாவட்ட ஆட்சியர், 17 காவல் துறையினர் உட்பட 21 பேர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அருணா ஜெகதீசன் விசாரணை ஆணையம் பரிந்துரைத்தது.

ஆணையத்தின் பரிந்துரைகளை அரசு முழுமையாக ஏற்றுக் கொள்வதாக தமிழக அரசின் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு தெரிவித்தார். மேலும், ஆணையத்தின் ஆலோசனைகளை ஏற்று தொடர்புடைய துறைகளால் பொருத்தமான ஆணைகளை வழங்குவதற்காக விரிவாக ஆய்வு செய்ய அரசு முடிவு செய்துள்ளது எனவும் அறிவித்திருந்தார். இதன் தொடர்ச்சியாக துப்பாக்கி சூட்டில் நேரடியாக ஈடுபட்டதாக அப்போதைய காவல் ஆய்வாளர் திருமலை, முதல்நிலை காவலர் சுடலைக்கண்ணு உட்பட 4 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில், அடுத்த கட்டமாக வழக்கில் தொடர்புடைய மீதம் உள்ள ஐபிஎஸ் அதிகாரிகள் உட்பட போலீஸ் அதிகாரி மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்த ஆய்வு டிஜிபி அலுவலகத்தில் தொடங்கி உள்ளது. முதல் கட்டமாக சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளிடம் தனித்தனியாக தன்னிலை விளக்கம் கேட்டு பெறப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக அப்போதைய தென்மண்டல ஐ.ஜி சைலேஷ் குமார் யாதவ் (சிலை கடத்தல் தடுப்பு பிரிவு கூடுதல் டிஜிபி), டிஐஜி கபில்குமார் சி.சரத்கர் (சென்னை போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையர்), ஒரு துணை ஆணையர், ஒரு டிஎஸ்பி, 3 இன்ஸ்பெக்டர், ஒரு எஸ்ஐ மற்றும் 7 போலீஸார் நேரில் வரவழைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட உள்ளது.

இதற்கான அழைப்பாணை சம்பந்தப்பட்டவர்களுக்கு விரைவில் அனுப்பப்பட உள்ளது. அதைத் தொடர்ந்து குற்றத்தின் தன்மையை பொறுத்து ஒழுங்கு நடவடிக்கை அல்லது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக போலீஸ் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், தூத்துக்குடி துப்பாக்கி சூடு விவகாரம் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

**- கௌரவ இணை ஆசிரியர் R. அகிலேஷ்**







# மாநகராட்சி முன்வராததால் மதுரை வைகை ஆற்றில் தூய்மைப்பணியில் ஈடுபட்ட பொதுமக்கள்!

**மாநகராட்சி தூர்வார முன்வராததால் தன்னார்வலர்கள் பொதுமக்கள் திரண்டு மதுரை வைகை ஆற்றில் குவிந்து கிடந்த குப்பைகளை அகற்றி இன்று தூய்மைப்பணியில் ஈடுபட்டனர்.**

மதுரை வைகை ஆற்றில் கடந்த காலத்தில் மாநகராட்சி நிர்வாகம் வாரம் ஒரு முறை அல்லது குறைந்தபட்சம் மாதத்தில் ஒரு முறையாவது மெகா தூய்மைப்பணி செய்தது. அந்த நிகழ்ச்சியின்போது கரையோரங்களில் வசிக்கும் மக்கள், குப்பை கொட்டுவோரிடம் மாநகராட்சி பணியாளர்கள் ஆற்றில் குப்பைகளைக் கொட்டக்கூடாது என விழிப்புணர்வு ஏற்படுத்துவர். மாநகராட்சியின் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் ஏராளமானோர் பங்கேற்பார்கள். இதனால், அடுத்த தலைமுறையினருக்கும் வைகை ஆறு போன்ற நீர்நிலைகளில் குப்பைகளை கொட்டக்கூடாது என்ற விழிப்புணர்வு ஏற்பட்டது.

இந்நிலையில் கடந்த மூன்று ஆண்டுகளாக வைகை ஆற்றில் மாநகராட்சி சார்பில் மெகா தூய்மைப்பணி மேற்கொள்ளப்படவில்லை. மேலும், அன்றாட தூய்மைப்பணியிலும் மதுரை வைகை ஆறு சேர்க்கப்படவில்லை. இதனால், வைகை கரை வார்டுகளில் தினசரி தூய்மைப்பணியில் ஈடுபடும் தூய்மைப்பணியாளர்கள், ஆற்றில் இறங்கி அங்கு கொட்டும் குப்பைகள், பாலித்தீன் பைகளை அகற்றுவதில்லை. மேலும், ஆற்றில் குப்பை கொட்டுவதைத் தடுக்கவும் மாநகராட்சி கண்டிப்பான நடவடிக்கை எடுக்கவில்லை.

இதனால், வைகை நதி மக்கள் இயக்கத்தினர், பொதுமக்களை, பள்ளி மாணவர்களுடன் இணைந்து வைகை ஆற்றில் குப்பைகளை சேகரித்து தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். இந்த நிகழ்ச்சியில் வைகை நதி மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் வைகை ராஜன், தன்னார்வலர்கள் மணிகண்டன், செந்தில்குமார், ஆறுமுகம், ராஜவேலு, சரவணன் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

வைகை நதி ராஜன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: "வைகை ஆற்றில் குருவிக்காரன் சாலைப்பகுதியில் குப்பைகளை சேகரித்தோம். இந்த ஒரு பகுதியில் அரைமணி நேரத்திற்குள் 20 பண்டல்களில் நிலத்தில் மக்காத பாலித்தீன் பைகளை சேகரித்தோம். அப்படியென்றால், மதுரை முழுவதும் இந்த ஆற்றில் எவ்வளவு பாலித்தீன் குப்பைகள் பரவிகிடக்கும். இந்த பாலித்தீன் குப்பைகள், மண் வளத்திற்கும், நிலத்தடி நீர் செல்வதற்கும் மிகப்பெரிய தடையாக உள்ளது. நாங்கள் சேகரித்த பாலித்தீன் கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கு தியாகராஜர் கல்லூரியில் உள்ள மறுசுழற்சி மையத்தில் ஒப்படைக்க உள்ளோம்." இவ்வாறு அவர் கூறினார்.

- கௌரவ இணை ஆசிரியர் C.சத்ஷ்



Owned and Published by M.ABDUL RAHMAN from No.61, Venkata Mesthiri Street, Mannadi, Chennai-600 001 and Printed S.ALI MOHAMED SAYEED by J.M.PROCESS, at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-600 014. Editor: K.MADHUSUDHANAN


மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு ( மாத இரு இதழ் )
வேலூர் தோட்டப்பாளையம், அருகந்தம்பூண்டி
ஸ்ரீ அங்காள
பரமேஸ்வரி ஆலயம்
19.02.2023
திருவிழாவிற்கு
வருகைதரும்
அனைவரையும்
வருக வருக என
வரவேற்க்கிறோம்
M.ராமச்சந்திரன்
மகாசிவராத்திரி மயானக்கொள்ளைத்திருவிழா

MANITHA URIMAIGAL MEETPU Tamil Fortnightly, November 1-15-2018
Regd. with the Registrar of News Papers for India under No. TNTAM / 2017 / 74330 / R.Dis.481 / 17

# நீயும் பெண் தானே?



அன்புள்ள அம்மா......
அன்புள்ள அப்பா......
நான் தற்போது எமனின்
மடியில் மரணத்தின் பிடியில்
போராடி கொண்டு இருக்கிறேன்
கடவுளால் படைக்க பட்ட மனிதன்
கடவுளை படைப்பதாக சொல்லி
என்னை உன் கருவறைக்குள்
பிரவேசிக்க செய்தார் கடவுள்
பிறகு கடவுளின் காலடியில் கிடக்கும்
மலரை போலே
உன் கருவறையில் தங்கினேன்
அம்மா நீ கோவில்
அப்போ கடவுள் எங்கே?
என்ற ஏக்கத்துடன்...........
சந்தோசமாக உன் கருவறையில்
முதல் மாதம் வளரத் தொடங்கின......
இரண்டாவது மாதம்
நீ சிரிக்கும் போது.....
நானும் சிரித்தேன்
நீ அழும் போது
நானும் அழுதேன்
நீ இமைக்கும் போது
நானும் இமைத்தேன்......
நீ தூங்கும் போது
நானும் தூங்கினேன்.......
பிறகு தான் தெரிந்தது
நீ அம்மா
நான் குழந்தை
என்ற புது உறவு.......
மூன்றாம் மாதம்
உன் நினைவுகளை
தாலாட்டு பாடியே
தூங்க வைத்தாயே.....
நான்காம் மாதம்
உன் இதயம் சத்தம் கேட்டு
நான் தூங்கி விடுவேன்
ஐந்தாம் மாதம்
ஆசையாய் கருவறையில்
விளையாடி கொண்டு இருந்த என்னை
தலைவிதி
என்னுடன் விளையாட ஆரம்பித்தது.....
என்னை ஸ்கேனில் பரிசோத்த போது
நான் பெண் குழந்தை
என்று ஒரு அரக்கன்
சொன்னது என் காதில் விழுந்தது.....
அப்போது தான் ஒரு தீராத வலி
என்னை உட்கொண்டது
நான்............
பெண் குழந்தையாம்
அதனால்
அரக்கன் பேச்சை கேட்டு
என்னை கருகலைப்பு செய்ய போகிறார்களாம்.......
ஆ...... கடவுளே
அரக்கன் திமிரை
அடக்க மாட்டாயா?...
நான் அழுதுகொண்டு இருக்கிறேன்
ஓரிரு நொடிகளுக்குள் என்
போராட்டம் முடிவிற்க்கு வர போகிறது
கடவுள் என்னிடம்
உன் அம்மா தான்
கடவுள் என்று என்னிடம்
சொல்லியிருந்தார........
அப்படியானால் அம்மா
கடவுள் இல்லையா?.....
அட கடவுளை நீயும்
இதுக்கு உடந்தையா?
என் அன்புள்ள அப்பா
என்னை அழிப்பதற்க்கு நீயும் சம்மதித்து
விட்டாயா?.......
நான் யோசித்து அழுது கொண்டு இருக்கும் போது
நான் கொஞ்ச கொஞ்சமாக
உயிர் இழந்து வருகிறேன்
அன்புள்ள அம்மா
அன்புள்ள அப்பா
உங்களை பார்காமலேயை
பிரிய போகிறேன்
எனக்கு பிடித்தமான
கருவறையை விட்டு
கண்ணீருடன் பிரிகிறேன்
வாழ்க்கை உங்களுக்கு
மரணம் ...எனக்கு...

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000